www.Padasalai.Net

10 - ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## சமூக அறிவியல்

பதிவு எண்.

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - அ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

14 X 1 = 14

1. முதல் உலகப் போரின் மிகப்பெரிய விளைவு
   அ) பசுமைப்புரட்சி ஆ) பிரெஞ்சுப்புரட்சி இ) ரஷ்யப்புரட்சி ஈ) அமெரிக்கப்புரட்சி
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்கு தலைமையேற்றவர்
   அ) முஸோலினி ஆ) ஹிட்லர் இ) ஜோசப் கோயேபெல்ஸ் ஈ) ஹோசிமின்
3. பன்னாட்டு சங்கம் உருவாக்கப்படுவதில் முன் முயற்சி எடுத்தவர்,யார்?
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோவில்சன் ஈ) பால்டுவின்
4. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர்
   அ) டாக்டர். சன்யாட்சென் ஆ) மா-சே-துங் இ) சூ-யென்-லாய் ஈ) யுவான் - ஷி - கே
5. *சரியான கூற்றை தெரிவு செய்க.*
   i) இரஜாராம் மோகன்ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.
   ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
   iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
   iv) இராஜாராம் மோகன் ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டவர்
   அ) (i) சரி ஆ) (i), (ii) ஆகியன சரி இ) (i), (ii), (iii) ஆகியன சரி ஈ) (i), (iii) ஆகியன சரி
6. இந்தியாவிலேயே மிகப் பழமையான மடிப்பு மலைத்தொடர்
   அ) இமயமலை ஆ) மேற்கு தொடர்ச்சி மலை இ) ஆரவல்லி மலை ஈ) விந்தியமலை
7. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்
   அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) மத்தியப்பிரதேசம் ஈ) கர்நாடகா
8. பொன் புரட்சி எந்த வேளாண் பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது?
   அ) உருளைக்கிழங்கு ஆ) எண்ணெய்வித்துக்கள் இ) தேன் ஈ) சணல்
9. ............... போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது
   அ) இரயில்வே ஆ) சாலை இ) வான்வழி ஈ) நீர்வழி
10. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர் B.R. அம்பேத்கார் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது.
    அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை
11. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத்தலைவர் நிதி நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்?
    அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360 இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365
12. ***கூற்று :*** மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.
    ***காரணம் :*** குடியரசுத்தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.
    அ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
    இ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
    ஈ) கூற்றும் மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
13. 1934 - ம் ஆண்டில் ............... என்பவரால் GDP யின் நவீன கருத்து முதல் முதலாக உருவாக்கப்பட்டது.
    அ) தாதாபாய் நௌரோஜி ஆ) அமர்த்தியா சென் இ) முக்ஹப் - உல்-ஹக் ஈ) சைமன் இஸ்நட்
14. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
    அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

பகுதி - ஆ

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண். 28 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

10 X 2 = 20

15. பதுங்குக்குழிபோர் முறை குறித்து நீங்கள் அறிந்தது என்ன?
16. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
17. முத்து முறைமுக நிகழ்வை விவரி.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
Scanned with CamScanner

18. பெர்லின் சுவர் – குறிப்பு வரைக.
19. சுவாமி விவேகானந்தரின் "செயல்பாட்டாளர்" சித்தாந்தத்தின் தாக்கமென்ன?
20. இந்தியாவின் திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
21. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
22. தமிழ்நாட்டில் கால்நடை கணக்கெடுப்பு எவ்வாறு மேற்க்கொள்ளப்படுகிறது?
23. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்புப் பற்றி ஒரு குறிப்பு வரைக.
24. இந்தியாவின் செம்மொழிகள் யாவை?
25. இந்திய குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
26. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதி வரையறை அதிகாரங்கள் யாவை?
27. மொத்த மதிப்பு கூடுதல் என்றால் என்ன?
28. உலகமயமாக்கலை சார்ந்த சீர்த்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

## பகுதி – இ

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண். 42 – க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10 X 5 = 50

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
    i) பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்சின் பிரதமர் .......... ஆவார்.
    ii) ஒரு பைசா தமிழன் பத்திரிக்கையை துவக்கியவர் .........
    iii) ஐரோப்பிய குழுமத்தின் தலைநகர் ................ நகரில் அமைந்துள்ளது.
    iv) இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் 1997 -ம் ஆண்டு ............ இல் நிறுவப்பட்டது.
    v) இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது ..........
30. முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவரி.
31. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசே துங்கின் பங்களிப்பை அளவிடுக.
32. பெண்கள் மேம்பாட்டிற்கு 19 – ம் நூற்றாண்டு சீர்த்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
33. **அ) வேறுபடுத்துக.**
    i) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.
    ii) சாலை போக்குவரத்து மற்றும் இரயில் போக்குவரத்து.
    ஆ) **காரணம் :** மேற்கு கடற்கரை சமவெளி குறுகலானது.
34. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
35. இந்திய தொழில்கங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி எழுதுக.
36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
37. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
38. அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் யாவை?
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
40. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?
41. ***கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரை.***
    1900 முதல் 19230 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்க.
42. **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்க.**
    1) இத்தாலி 2) ஜெர்மனி 3) பிரிட்டன் 4) பிரான்ஸ் 5) ஆஸ்திரியா – ஹங்கேரி.

## பகுதி – ஈ

2 x 8 = 16

**குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

43. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க. ***(அல்லது)***
    லெனின் தலைமையிலான ரஷ்யப்புரட்சியின் போக்கினை விளக்குக.
44. **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
    1) K2 சிகரம் 2) காம்பே வளைகுடா 3) தார் பாலைவனம் 4) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை
    5) மலபார் கடற்கரை 6) பன்னா உயிர் கோள பெட்டகம் 7) தேயிலை விளையும் பகுதி 8) கொச்சி – துறைமுகம்
    ***(அல்லது)*** 1) எவரெஸ்ட் சிகரம் 2) கட்ச் வளைகுடா 3) மாளவ பீடபூமி 4) தேயிலை விளையும் பகுதி
    5) கொல்கத்தா துறைமுகம் 6) இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்
    7) டெல்லி 8) நிலக்கரி கிடைக்கும் இடம் ஒன்று



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
Scanned with CamScanner